# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2048/13 - 2017 දෙසැම්බර් මස 04 වැනි සඳුදා - 2017.12.04

*2048/13 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டத்தின் இரத்தொட்டை நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணிப்பதற்காக மாற்றீடான காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,<br>
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்<br>
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,<br>
இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,<br>
பெலவத்தை,<br>
பத்தரமுல்லை,<br>
2017, நவெம்பர் 23,<br>
5/2/1/1333.

**அட்டவணை**

*மாத்தளை மாவட்டத்தில், இரத்தொட்டை பிரதேச செயலாளர் பிரிவில், மாஉஸ்ஸாகொல்ல கிராம அலுவலர் பிரிவில், வெலன்கஹவத்த கிராமத்தில் அமைந்துள்ள அஸ்அத்துமே வத்த தென்னேயாய வத்த என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 01 ஏக்கர், 03 றூட் 05.75 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *வெலங்கஹவத்தயில் இருந்து இரத்தொட்டை வரையுள்ள வீதி (மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை) ;* |
| *கிழக்கு* | : | *மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய பாதை ;* |
| *தெற்கு* | : | *டி. ஏ. ஜீ. ஹேமலதா அவர்கள் உரிமைகோருகின்ற 18 ஆம் இலக்க திட்டவரைவின் துண்டு இலக்கம் 02 இன் ஒரு பகுதி மற்றும் இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ;* |
| *மேற்கு* | : | *டி. ஏ. ஜீ. ஹேமலதா அவர்கள் உரிமைகோருகின்ற 18 ஆம் இலக்க திட்டவரைவின் துண்டு இலக்கம் 02 இன் ஒரு பகுதி மற்றும் இக்காணியின் மீதமாயுள்ள பகுதி .* |

*காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் :*

1. *திரு. டபிள்யூ. பாலித குணரத்ன,*
   *திக்கும்புர - இரத்தொட்டை.*
2. *திரு. எச். எம். எல். கே. ஹேரத்,*
   *திக்கும்புர - இரத்தொட்டை.*
3. *திரு. டபிள்யூ. ஏ. ஜீ. பி. சமரநாயக,*
   *இல. 71, மாஉவுஸ்ஸாகொல்ல.*
4. *திருமதி டி. ஏ. ஜீ. ஹேமலதா,*
   *திக்கும்புர - இரத்தொட்டை.*

*12- 587*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*